அவர்கள், புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திலே மீன் சம்பந்தப்பட்ட தொழில்களைச் செய்வதற்கும், தொழிற்சாலைகள் அமைப்பதற்கான திட்டங்களையும் அறிவித்திருக்கின்றார்கள். அந்த அடிப்படையிலே புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் நீங்கள் தொழில் செய்ய முடியும் என்று சொன்னால், அதற்கான உதவிகளை இந்த அரசு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அரசன் அவர்கள் சொல்லும்போது, சங்காயம் என்று சொன்னார்கள். சங்காயம் என்றால் என்ன என்பதைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவைக்குக் கொஞ்சம் விளக்கமாகத் தெரிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சொன்னவரிடம் கேளுங்கள். வினா எண் 92, திரு. பி.எம். நரசிம்மன், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

92—

புதிய வட்டம்

***18710—திரு. பி.எம். நரசிம்மன்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு வட்டத்திலிருந்து ஆர்.கே. பேட்டை, பாலாபுரம் மற்றும் எரும்பி ஆகிய பிர்க்காக்களைப் பிரித்து, ஆர்.கே.பேட்டையைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டமாக அறிவிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2003 நவம்பர் 7]

திரு. பி. எம். நரசிம்மன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிப்பட்டு வட்டம், 80 கிலோமீட்டர் தூரம் கொண்ட பெரிய பரப்பளவு கொண்ட வட்டமாகும். இரண்டு ஒன்றியங்களைக் கொண்டதாகும். இப்பகுதி மக்கள் இதனை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று நீண்ட நெடு நாட்களாகக் கோரிக்கை எழுப்பி வருகின்றனர். விதியைத் தளர்த்துகின்றபோது மறுபரிசீலனை செய்து, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே ஆர். கே. பேட்டை ஒன்றியத்தைப் பிரித்து, ஆர்.கே. பேட்டையை புதிய வட்டமாக அறிவிக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டங்கள், கோட்டங்கள் மற்றும் வட்டங்கள் புதிதாக ஏற்படுத்த மற்றும் பிரிக்கக் கோரி பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மற்றும் நகர்மன்றத் தலைவர்களிடமிருந்து ஏராளமான மனுக்கள் வந்த வண்ணம் இருப்பதால், இது தொடர்பாக அளவுகோலை ஏற்படுத்தித் தரக் கோரி அரசுக்கு முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் கருத்துரு அனுப்பியுள்ளார். அளவுகோல் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேலும் அரசின் தற்போதைய நிதிநிலையைக் கருத்தில்கொண்டு புதிய வட்டங்கள் போன்ற நிர்வாக அமைப்புகளை உருவாக்க ஆய்வுககு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 93, திரு. கே.எஸ். தென்னரசு, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

93—

இடம் மாற்றம்

***19411—திரு. கே.எஸ். தென்னரசு:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டிலுள்ள கிராம நிர்வாக அலுவலர்களை இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை மாறுதல் செய்யும் உத்தேசம் அரசிடம் உள்ளதா?